அ.வ.எண். 15/2016 நாள்: 17.02.2026

பி.சா.1 திரு. சுயபிரகாசம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4) வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். வாதியின் இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும், எனது அப்பா வாங்கிய இடத்தில்தான் வீடு கட்டியுள்ளேன். நான் வீடு கட்டி எத்தனை வருடம் இருக்கும் என்றால் 15 வருடங்கள் ஆகிறது. நான் எனது அப்பா வாங்கிய இடத்தில்தான் வீடு கட்டியுள்ளேன் என்ற விவரத்தை எனது எதிர்வழக்குரையிலோ, எனது முதல்விசாரணை வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் வீடு கட்டும்போது சர்வேயம் மூலம் நிலத்தை அளவீடு செய்துதான் வீடு கட்டினேனா என்றால் ஆமாம்.

5) அவ்வாறு நிலஅளவை செய்யும்போது வாதி அங்கு இருந்தாரா என்றால் ஆமாம். நான் வீடு கட்டி முடித்தபிறகு நிலஅளவை செய்தார்களா என்றால் இல்லை, நிலஅளவை செய்தபிறகுதான் வீடு கட்டினேன். நான் வீடு கட்டிய இடம் பட்டாபடி நிலஅளவை செய்யப்பட்டதா அல்லது பத்திரப்படி நிலஅளவை செய்யப்பட்டதா என்றால் பட்டா மற்றும் பத்திரப்படி நிலஅளவை செய்யப்பட்டது. பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்கள் பற்றி எதிர்வழக்குரையில் கூறப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற மூலம் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை நிலஅளவை செய்தாரா என்றால் ஆமாம். அவ்வாறு அளவீடு செய்து தாக்கல் செய்த அறிக்கையில் வாதியின் இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரிந்து கொண்டேன்.

6) எவ்வளவு விஸ்தீரணம் இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை நான் தெரிந்து கொள்ளவில்லை. பி.சா.ஆ.12 முதல் பி.சா.ஆ.17 வரையிலான வரி ரசீதுகளில் நான் வசிக்கும் இடத்திற்கான புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் கட்சி செய்யும் இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.275 ஆகும். அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி தன்னுடைய உரிமைமூல ஆவணத்திலுள்ள சொத்தினை பட்டாவில் அதிகமாக உள்ளது என்ற அடிப்படையில் வாதியின் இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டி பொய்யாக

கட்சியாடுகிறேன் என்றால் சரியல்ல, நான் கிரையம் வாங்கிய இடத்தில் 60 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் உரிமை இல்லாத இடத்தில் உரிமை உள்ளதாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல, எனது உரிமை உள்ள இடத்தில்தான் வீடு கட்டியுள்ளேன்.

ம.வி.இல்லை.

S.d/ Suyamprakasam

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.17 18:56:20 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU